# ??????????? ???? ????????? ??????? : ????????? ???????????? ??????!



நெல் சந்தைப்படுத்தல் சபையை விடுத்து தனியாருக்கு நெல் கொள்வனவு செய்வதற்கு அனுமதிப்பது என்பது தொடர்பான விவசாய அமைச்சரின் கருத்தானது மனவேதனையளிப்பதாக இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளன செயலாளர் முத்து சிவமோகன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இன்று நடாத்திய ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தை தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் இந்த காலபோக செய்கையில்,

“விளைச்சலில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்ட நிலையில் அரசாங்கத்திடம் இழப்பீடு கேட்டு நிற்கின்ற நேரத்தில் அரசாங்கம் நெல்லையும் கொள்வனவு செய்யாது தனியாருக்கு வழங்கினால், தனியார் நினைத்த விலையில் கொள்வனவு செய்வார்கள்.

அத்துடன், தனியார் இன்னும் குறைந்த விலையில் நெல்லை கொள்வனவு செய்வார்கள். இதன் காரணமாக விவசாயிகளே பாதிக்கப்படுவார்கள்” என அவர் மேலும் தெரிவித்தார்.

---

# ????????? ????? ?????????????

# ??????????!




மன்னார் மாவட்டத்தின், நானாட்டான் பிரதேசத்திலுள்ள காணிகளை மக்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு கோரி, இன்று பொதுமக்களால் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கொம்பன் சாய்ந்த குளம் பகுதியில் உள்ள 46 ஏக்கர் காணியை 113 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு கோரியே, இசைமாளத்தாழ்வு கிராம மக்களினால் குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் திணைக்கள தலைவர்கள் இந்த விடயத்தில் தலையிடவேண்டும் என வலியுறுத்திய போராட்டக்காரர்கள், போராட்டத்தின் பின்னர் பல கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் உதவி மாவட்ட செயலாளர், உதவி பிரதேச செயலாளர், மற்றும் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் ஆகியோருக்கு கையளித்துள்ளனர்.

---

# ???????? ???????? ???????????? ?????? ??????????? ????????????!



கடந்த 2018 ஆம் ஆண்டு, நல்லாட்சி அரசாங்கத்தின் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன, அப்போது பிரதமராக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்கவை அப்பதவியில் இருந்து நீக்கியிருந்தார்.

இந்நிலையில் குறித்த சம்பவத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், குறித்த மனுவை விசாரணை செய்ய உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன் இது தொடர்பில் நீதிமன்றில் சாட்சியமளிக்குமாறு பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டோருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

---

# ????????? ???????????? ?????????????? ?




# [illegible] [illegible] [illegible] -ITJP [illegible] [illegible] [illegible] [illegible]

கோத்தபாயா ராஜபக்ஷ எப்போதாவது பொறுப்புக்கூற வைக்கப்படுவாரா என கேள்வி எழுப்பியுள்ள சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயல்திட்ட அமைப்பு (ITJP) கோத்தபாய ராஜபக்ஷவின் போர்க்கால வகிபாகம்

என்னும் அதிர்ச்சி அறிக்கையை வெளியிட்டுள்ளது.

சிறிலங்காவில் 1980களில் இறுதிப்பகுதியில் இடம்பெற்ற முன்னைய வன்முறைக்காலப்குதியின்போது, பாரிய வலிந்து காணாமல் ஆக்கப்படுதல்களில் கோத்தபாய ராஜபக்ஷ ஈடுபட்டிருந்ததான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஆராய்வுசெய்து 2022 இல் ITJP யால் வெளியிடப்பட்ட அறிக்கையின் தொடர்ச்சியாக இவ்வறிக்கை வெளிவருகின்றது

சிறிலங்காவில் போர் முடிந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு, முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ, குறித்த உள்நாட்டுப் போரில் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களில் முக்கிய வகிபாகம் கொண்டிருந்ததற்கான பெருமளவு ஆதாரங்கள் வெளிவந்துள்ளன என மனித உரிமை வழக்கறிஞர்கள் புதிய அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

நூறு பக்கங்களை கொண்ட இந்த அறிக்கையில் முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய பாதுகாப்பு அமைச்சின் செயலராகப் பதவிவகித்தபோது, 2009 இல் சண்டைக்களத்திலிருந்த தளபதிகளுக்கு கட்டளைகளை வழங்கியமைக்கான விரிவான ஆதாரங்கள் மற்றும் அவர் இராணுவத் தளபதியாக இல்லாதபோதிலும்கூட, பாதுகாப்புப் படைகளுக்கு கட்டளையிட்டதுடன், அவர்கள் மீதான செயற்றிறன் மிக்க கட்டுப்பாட்டினையும் கொண்டிருந்தமை, சர்வதேச மனிதாபிமானச் சட்டமும் சர்வதேச குற்றவியல் சட்டமும் மீறப்பட்டுக்கொண்டிருந்தமை தொடர்பாக அப்போதே நன்கு தெரிந்திருந்ததுடன், அவற்றைத் தடுப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கத் தவறியதுடன், அல்லது, தனக்குக் கீழே செயற்பட்டவர்களைப் பொறுப்புக்கூறவைக்க முயலவுமில்லை என்பதை சான்றுகளுடன் வெளிச்சம்போட்டு காட்டப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாது பொதுமக்களைப் பாதுகாப்பதற்கென ஏற்படுத்தப்பட்ட போர்த்தடை வலயங்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்களில் கோத்தபாய ராஜபக்ஷ கொண்டிருந்த வகிபாகத்தினையும், விசாரணைகளற்ற படுகொலை, வலிந்து காணாமல் ஆக்கப்படுதல்கள், சித்திரவதை, பாலியல் வன்முறை, பாலியல் வன்புணர்ச்சி, எழுந்தமானகத் தடுத்தவைத்தல், பொதுமக்களுக்கு மனிதாபிமான உதவிகள் சென்றடைவதைத் தடுத்தல் ஆகியவற்றைத் தடுப்பதற்கு அவர் தவறியமையும் தொடர்பான ஆதாரங்களையும் இவ்வறிக்கை ஆய்வுசெய்கின்றது.


கோத்தபாயாவுக்கும் அவரது போர்க்கால தளபதிகளுக்கும் இருந்த படையணி மற்றும் பாடசாலைத் தொடர்புகள் 2009 வன்னி நடவடிக்கையின் போது இருந்த சிறிலங்கா இராணுவ கட்டமைப்பு இறுதிப்போரில் நடந்த குறிப்பிட்ட நிகழ்வுகள் வெள்ளைக்கொடியுடன் சரணடைதல், 3 போர்த்தடை மண்டலங்களை ஒருதலைப்பட்சமாக அறிவித்து அதற்குள் பொதுமக்களை செல்லுமாறு கூறி பின்னர் அவற்றின் மீது கனரக ஆயுதங்களால் கொடூர மனங்கொண்டு தாக்கியமை, தரைவழி இராணுவச் செயல்பாடு பற்றிய கோத்தபாயாவின் அறிதல், மற்றும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்களில் ஒவ்வொரு வருடமும் வெளிவந்த முரண்பாடான தொகைகள் என்பன குறித்து மிகத் தெளிவாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் கோத்தபாய தொடர்பிலான அதிர்ச்சி தரும் மேலும் பல தகவல்கள் கொண்ட இந்த அறிக்கை குறித்து கருத்து தெரிவித்த ITJP யின் நிறைவேற்று பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா
'தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் எதிராக வன்முறைகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மிகவும் மோசமானவராக கோத்தபாய ராஜபக்சவே இருக்கமுடியும். 1989 தொடக்கம் 2009 வரைக்கும், அத்துடன் இன்றுவரைக்கும் தண்டனையிலிருந்து விலக்களிக்கும் போக்கு காணப்படுகின்றது. பல விசாரணை ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு, அவற்றின் அறிக்கைகள் வெளியிடப்படாமலும் பரிந்துரைகள் நிறைவேற்றப்படாமலும் உள்ளன.

இவை பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஏமாற்றத்தினையும் அரசாங்கத்தின் மீது அவநம்பிக்கையையும் ஏற்படுத்தின. குற்றவாளிகளைப் பொறுப்புக்கூறவைக்காமல், பாதிக்கப்பட்ட சமூகங்களுக்குத் தேவைப்படும் மீளவும் நிகழமாட்டா என்பதற்கான உத்தரவாதத்தினை வெறுமனே ஆணைக்குழுக்களின் விசாரணைளால் பெற்றுவிடமுடியது என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# கோத்தபாய ராஜபக்சவின் போர்க்கால வகிபாகம்

ஜனவரி 2024




INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

# NAMATHU EELANADU-E-PAPER-JANUARY -2024



# British Shadow Minister Alex Norris supports the Calls for Ban on Sri Lankan Army Commander Shavendra Silva







In a significant virtual meeting on January 19, 2024, Alex Norris MP, the Shadow Minister of British Police and Member of Parliament for Nottingham North, supported the call to ban Sri Lankan Army Commander General Shavendra Silva under the Global Human Rights Sanction Regime. The meeting, chaired by legal adviser and human rights activist Geeth Kulasegaram, was attended by several prominent figures including Benjamin Kumar Morris, Director of the Sri Lanka Campaign for Peace and Justice, Sen Gandiah, Chairman of Tamils For Labour, and Roy Ickson from the International Center for the Prevention and Punishment of Genocide (ICPPG).

Key issues raised during the meeting focused on Britain's historical responsibility in Sri Lanka's genocide and the failure of the British Foreign Office (FCDO) to act on submitted evidence of war crimes and human rights violations, including those under the command of Shavendra Silva. The meeting highlighted Silva's implication in war crimes as per United Nations reports and the existing travel bans against him by the United States and Canada. Attendees urged the UK to follow suit, aligning with the continuous protests by Tamil activists in Britain.

Kulasegaram emphasized the ongoing human trafficking and torture in Sri Lanka, while Morris detailed the war crimes committed by Silva. Kandiah expressed disappointment over the FCDO's response to parliamentary demands for Silva's ban and called for Britain to recognize the genocide in Sri Lanka and support an investigation by the International Criminal Court.

MP Norris, attentive to the discussions, acknowledged his growing understanding of the Sri Lankan issue and the Tamil community's plight. He committed to advocating for the Tamils' right to self-determination and to pressuring the FCDO to ban Silva. Norris also pledged to join the All Party Parliamentary Group for Tamils (APPGT) and the All Party Parliamentary Group for Magnitsky Sanctions (APPG), showing gratitude for the enlightening meeting and information shared.


CLARK, Suzi
Roy Jakshan Jesuthasan - ICPPG
anushan
Ben Kumar Morris
Sen Kandiah Tamils for Labour
Vithushan
Geeth Kulasegaram

# ????????? ????????? ?????? ???????-871 ???? ????!



நாடளாவிய ரீதியாக மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் கீழ் இன்று அதிகாலையுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் 871 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


அதன்படி கைது செய்யப்பட்ட 871 பேரில் போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 626 பேரும், குற்றப்புலனாய்வு பிரிவினால் அனுப்பப்பட்ட பட்டியலில் உள்ள 245 பேரும் அடங்குவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேநேரம் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியகம் மற்றும் விசேட பணியகத்தினால் தேடப்படும் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள 14 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ???????? ????????? ??? ?????????? ???????????????? ????????????? ??????????? ?????? ?????????? ??????



## ???????? ???????? ???.?? ?????? ???????????? ?????????????? ???????




இலங்கை இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்ட யுத்தகுற்றவாளிகளை உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பான தடைவிதிப்பு அதிகாரசபையின் கீழ் (Global Human Rights Sanction Regime) தடைசெய்வதற்கு பிரித்தானிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி, பிரித்தானிய காவல்துறையின் நிழல் அமைச்சரும், நாட்டிங்ஹாம் வடக்கு (Nottingham North) பகுதி பாராளுமன்ற உறுப்பினருமாகிய மதிப்பிற்குரிய அலெக்ஸ் நோரிஸ் எம்.பி (Hon. Alex Norris MP) அவர்களுடன் இராஜதந்திர சந்திப்பு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை (19/01/2024) மதியம் 2.30 மணியளவில் மெய்நிகர் வழியாக

இடம்பெற்றுள்ளது.

சட்ட ஆலோசகரும் மனித உரிமைசெயற்பாட்டாளருமான திரு கீத் குலசேகரம் அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இந்த முக்கிய சந்திப்பில் The Sri Lanka Campaign for Peace and Justice அமைப்பின் பிரச்சாரப் பணிப்பாளர் திரு. பென்ஜமின் குமார் மொறிஸ், தொழில்கட்சிக்கான தமிழர்கள் (Tamils For Labour) அமைப்பின் தலைவர் திரு சென் கந்தையா, மற்றும் இனப்படுகொலையை தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமாக சர்வதேச மையத்தின் (ICPPG) சார்பில் திரு. றோய் ஐக்ஷான் கலந்துகொண்டார்.

அத்துடன் இனப்படுகொலையின் நேரடி சாட்சியங்கள் மற்றும் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களான கனேசமூர்த்தி விதுஷன், அனுஷன் பாலசுப்ரமணியம், மற்றும் பிரகலதன் சிவகுருநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கீத் குலசேகரம் அவர்கள் உரையின் போது, இலங்கையில் இடம்பெறும் இனப்படுகொலைக்கு வரலாற்று ரீதியாக பிரித்தானியாவே பொறுப்பு என்பதை விளக்கி, தமிழ்மக்களுக்கு நீதி வழங்க வேண்டிய கடமைப்பாட்டையும் எடுத்துரைத்தார். ITJP மற்றும் ICPPG ஆகிய அமைப்புக்கள் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சிற்கு(FCDO) போதுமான ஆதாரங்களை சமர்பித்த போதும் இன்னும் உரிய நடவடிக்கை எடுக்க தவறியிருப்பதனை சுட்டிக்காட்டினார். அத்துடன் இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற யுத்த குற்றங்கள் மட்டுமன்றி, தற்போது இலங்கையில் தொடரும் ஆள்கடத்தல் மற்றும் சித்திரவதைகளும் சவேந்திர சில்வாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஆயுத படைகளே மேற்கொண்டுவருவதால் அதற்கும் சவேந்திர சில்வாவே பொறுப்பு என்றும், சந்திப்பில் கலந்துகொண்ட சித்திரவதைக்குள்ளானவர்கள் இதற்கு நேரடிசாட்சி என்றும்தெரிவித்தார்.

சவேந்திர சில்வா யுத்தகுற்றங்களில் ஈடுபட்டிருப்பதைஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் குறிப்படப்பட்டிருப்பதையும், அவர்மீது ஏற்கனவே அமெரிக்கா, கனடா பயணத்தடை விதித்துள்ளதையும் எடுத்துக்காட்டிய அவர், அமெரிக்கா, கனடாவின் வழியை பின்பற்றி பிரித்தானியாவும் தடை விதிக்கவேண்டும் என்று கோரி பிரித்தானிய புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர் என்பதையும் விவரித்தார்.

அடுத்து உரையாற்றிய திரு. பெஞ்ஜமின் குமார் மொறிஸ், சவேந்திர சில்வா இழைத்த யுத்தக்குற்றங்களையும் அதற்கான ஆதாரங்களையும் விபரமாக எடுத்து விளக்கினார். தொடர்ந்து உரையாற்றிய சென் கந்தையா அவர்கள், இலங்கை இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவினை தடைசெய்வதற்கு இதுவரை 50ற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அனுப்பிய கோரிக்கைகளுக்கு சரியான பதிலை FCDO தராதது வருத்தத்தை தருவதுடன், தற்போதைய பிரித்தானிய அரசாங்கம் இலங்கைக்கு எதிராக தடை விதிக்க தயக்கம் காண்பிப்பது ஏன் என்று வினவினார். பிரித்தானிய எதிர்கட்சி தலைவர் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரனை செய்ய வேண்டும் என கூறியதை வரவேற்பதாகவும் அதேபோல் இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலையினை பிரித்தானியா அங்கீகரிக்க வேண்டும் என வழியுறுத்தினார்.

அனைவரின் கருத்துக்களையும் உள்வாங்கிய பாராளுமன்ற உறுப்பினர், மிகவும் ஆர்வத்துடன் மேலதிக விபரங்களையும் கேட்டறிந்தார். இலங்கை பிரச்சனை பற்றி தான் ஓரளவு அறிந்திருந்த போதிலும், ஈழத்தமிழர்கள் தன்னை சந்தித்து இவ்வாறு விளக்கமாக உரையாடியது இதுவே முதல்தடவை என்றும், இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை என தாம் முழுமையாக ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கு தான் முழுமையாக ஆதரவளிப்பதாகவும், தனது தொகுதியிலுள்ள பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள் சார்பில் இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவினை தடைசெய்யக் கோரி FCDO

விற்கு அழுத்தம் கொடுப்பதாகவும் வாக்களித்தார். அத்துடன் தமிழருக்கான அனைத்துக்கட்சி பாராளுமன்ற குழு (APPGT) மற்றும் மக்னெட்ஸ்கை தடைகளுக்கான அனைத்துக்கட்சி பாராளுமன்ற குழு (APPG for Magnitsky Sanctions) என்பவற்றில் இணையவும் உத்தரவாதமளித்தார். தன்னை முதல்முறையாக சந்தித்து, இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை பற்றி பயனுள்ள முக்கிய தகவல்களை பகிர்ந்துகொண்டமைக்கு தனது நன்றிகளையும் தெரிவித்தார்.

---

# ?????????? ?????????????? ?????
?????? ??????? ????









**By– Dilaksan Manorajan**

தமிழர்கள் வாழ்வின் பெரும் பண்பாட்டு நிகழ்வான தமிழ் மரபுத் திங்கள் விழா இலண்டனில் நேற்று விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

இயற்கையை தெய்வமாக வழிபடும் தமிழர்கள் அந்த இயற்கைக்கு நன்றி கூறி விழா எடுப்பதுடன் தமிழர்களின் பண்பாட்டு சிறப்பையும்; கொண்டாடும் இந்த தை மாதத்தில் உலகெங்கும் வாழும் தமிழர்கள் தைத் திருநாளை கொண்டாடி வருகின்றனர்.

அந்த வகையில் பிரித்தானியாவின் பல பகுதிகளிலும் பரந்து வாழும் தமிழர்கள் தம் அடையாளங்களின் வழி பயணிக்கவும் தம் அடையாளங்களை இளைய இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்ப்பதற்கும் தமிழ் மரபுத்திங்கள் நிகழ்வுகளை பல்வேறு பகுதிகளிலும் கொண்டாடி வருகின்றனர்.

இந்நிலையில் பிரித்தானியாவை தளமாகக் கொண்டு இயங்கும் தமிழ் தகவல் நடுவம் (**TIC**) மற்றும் சமூக அபிவிருத்திக்கான மையம் (**CCD**) ஆகியன இணைந்து தமிழ் மரபுத் திங்கள் விழாவினை நேற்று ஞாயிற்றுக்கிழமை (21) கோலாகலமாக கொண்டாடினர்.

தமிழர்களின் வீர இசை பறை முழங்க மங்கள வாத்திய இசை மற்றும் மயிலாட்டம், குதிரையாட்டம், புலியாட்டம், கரகாட்டம், சிலம்பாட்டம் என தமிழர் கண்கவர் கலைகளுடன் விருந்தினர்கள் திறந்தவெளி அரங்கிற்கு அழைத்துவரப்பட்டு பல்வேறு கலை நிகழ்வுகளுடன் கோலாகலமாக நடைபெற்றது.

நமது ஈழநாட்டின் பிரதான ஊடக அனுசரணையுடன் கிங்ஸ்டனின் நியூமோல்டனில் உள்ள Jubilee Square எனும் இடத்தில் வெகுசிறப்பாக நடத்தப்பட்ட இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக,

தாராளாவாத ஜனநாயகக்கட்சியின் (Liberal Democrat) தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் சேர் எட் டேவி (Rt.Hon.Sir Ed Davey), ரிச்மண்ட் பார்க் மற்றும் கிங்ஸ்டன் நாடாளுமன்ற உறுப்பினர் சாரா ஓல்னி (Hon. Sarah Olney) ஆகியோரும் கிங்ஸ்டன் நகரபிதா கவுன்சிலர் Cllr. Diane White – (Mayor of Royal Borough of Upon Themes), துணை மேயர் ரிச்சர்ட் தோர்ப் (Cllr. Richard Thorpe) மற்றும் அவரது துணைவியார் Cllr. Lynn Henderson, கிங்ஸ்டன் நகரசபை தலைவர் கவுன்சிலர் அன்றியஸ் கேர்ஸ்ச் (Cllr. Andreas Kirsch), கிங்ஸ்டன் கவுன்சில் நிறைவேற்று பணிப்பாளர் சாரா அயர்லாந்து (Sarah Ireland CEO) ஆகியோர் கலந்துகொண்டதுடன் சிறப்புரைகளும் வழங்கினர்.















மேலும் முன்னாள் மேயரும் தற்போதய கவுன்சிலருமான தயா தயாளன் மற்றும் பல கவுன்சிலர்கள்இ தமிழ் அமைப்புக்களின் தலைவர்கள், தமிழ் அறிஞர்கள் மற்றும் பிரமுகர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து

சிறப்பித்தனர்.

திறந்தவெளி அரங்கில் இடம் பெற்ற இந்நிகழ்வானது தமிழர்களின் பண்பாட்டு பெரும் அடையாளமான பொங்கல் காட்சிப்படுத்துலுடனும் சறே தமிழ் பாடசாலை மாணவர்களின் தமிழ் மொழி வாழ்த்து மற்றும் கிங்ஸ்டன் தமிழ் பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடனம் ஆகியவற்றுடன் சிறப்புற ஆரம்பமானது.

தொடர்ந்து அதிதிகளின் சிறப்புரைகளும் மாணவ மாணவிகளின் நடனங்கள் மற்றும் மயிலாட்டம் கும்மியாட்டம் கோலாட்டம் என்பனவும் அரங்கேற்றப்பட்டது. அத்துடன் தமிழர்களின் கலைகளில் ஒன்றான வர்மக் கலை நிகழ்த்தி காண்பிக்கப்பட்டதுடன் மெய்வெளி அரங்க இயக்கத்தின் சர்வதேசமே கேள் கூத்தல் ஒரு கட்டியம் என்ற நாட்டுக்கூத்தும் அரங்கேற்றப்பட்டது.

இதனிடையே இந்த மரபுத் திங்கள் விழாவின் போது “இலங்கைத் தமிழர்கள்: ஒரு காலவரையறையற்ற பாரம்பரியம்” (Tamils of Lanka : A Timeless Heritage) என்ற கண்காட்சியும் இடம்பெற்றது. தமிழரின் வரலாற்றை அவர்களின் பயணப்பாதையை மிக இலகுவாக வெளிக்காட்டி நின்ற அந்த கண்காட்சியில் தமிழர்களின் பண்டைய பாவனைபொருட்கள் மற்றும் அவர்கள் மீது அரங்கேற்றப்பட்ட தொடர்ச்சியான இனவழிப்பு சாட்சியங்கள் என்பனவும் காட்சிப்படுத்தப்பட்டன.

மறுபக்கத்தில் சமையல் கலை நிபுணரான கௌரி ரூபன் அவர்களின் தமிழ் பாரம்பரிய உணவுக்கண்காட்சியும் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு Newmalden Partnership, Royal Borough of Kingston Upon Themes தமிழ் பாடசாலை மற்றும் கிங்ஸ்டன் தமிழ் பாடசாலை ஆகியன இணை அனுசரணை வழங்கியதுடன் IBC தமிழ்மற்றும் மெய்வெளி ஆகியன ஊடக அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பல்லின பண்பாட்டுச் சூழலில் நாம் எமது மரபுகளை பேணிப் பாதுகாப்பதற்கும் நாம் ஒரு நீண்ட நெடிய நாகரீகமுடைய தமிழ் தேசிய இனம் என்பதை நிலை நிறுத்துவதற்கும் பல்வேறு நாகரிகங்களைக் கொண்ட மக்கள் வாழும் பிரித்தானியாவில் தமிழ் மரபுத்திங்கள் எங்கள் இனத்தின் பெரும் அடையாளமாக திகழ்கின்றது.

**Photos by – Kajananth Suntharalingam**



தமிழ்
HERITAGE MONTH
franco
Tamil Heritage Month Celebrations
தமிழ் மரபுத் திங்கள்
கொண்டாட்டம்
All are welcome!
@Kajananth suntharalingam




தமிழ்
HERITAGE MONTH
Tamil Heritage Month Celebratio
தமிழ் மரபுத் திங
கொண்டாட்டம்
All are welcome!
BV11 YAE
@Kajananth suntharalingam


@Kajananth suntharalingam


தமிழ்
HERITAGE MONTH
@Kajananth suntharalingam


@Kajananth suntharalingam


@Kajananth suntharalingam


@Kajananth suntharalingam


@Kajananth suntharalingam


@Kajananth suntharalingam


HOME ON THE HILL
Tamil Heritage Month Celebrations
தமிழ் மரபுத் திங்கள்
All are welcome
@Kajananth suntharalingam


HOME ON THE HILL
Tamil Heritage Month Celebrations
தமிழ் மரபுத் திங்கள்
All are welcome!
@Kajananth suntharalingam


MEDIA
@Kajananth suntharalingam


@Kajananth suntharalingam


ELDERS
EMPOWERMENT
PROGRAMME
@Kajananth suntharalingam


MEDIA
NEW MALDE
@Kajananth suntharalingam


HERITAGE MO
@Kajananth suntharalingam


@Kajananth suntharalingam


Non-violent resistance to emerging militancy
Political Resistance
@Kajananth suntharalingam








MEDIA
@Kajananth suntharalingam


@Kajananth suntharalingam

---

# ?????????? ???????????? ????????????? ??????? ??????????????!


THE SRI LANKAN GOVERNMENT SHOULD WITHDRAW OPPRESSIVE DRAFT LAWS!
பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்
ANTI-TERRORISM ACT
ONLINE SAFETY ACT
MAKE LAWS TO PROTECT CITIZENS NOT TO OPPRESS THEM

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மற்றும் நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் என்பனவற்றை மீளப்பெறுமாறு வலியுறுத்தி மட்டக்களப்பில் மாபெரும் கவன ஈர்ப்பு பேரணி முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சிவில் சமூக அமைப்புகளால் குறித்த கவனயீர்ப்பு மற்றும் அடையாள உண்ணாவிரத போராட்டம் என்பன முன்னெடுக்கப்பட்டன.

இலங்கை அரசாங்கம் அடக்குமுறை சட்ட வரைபுகளை மீளப்பெறவேண்டும் என்ற தொனிப்பொருளில் மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகிலிருந்து பேரணி ஆரம்பமானது.

பேரணியானது மட்டக்களப்பு காந்திபூங்கா வரையில் சென்றதுடன் அங்கு ஊடகவியலாளர்கள் நினைவுத்தூபிக்கு அருகில் கவன ஈர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.


சுதந்திரமான வெளிப்படுத்துவதற்கும் ஒன்றுசேருவதற்குமான உரிமையினை உறுதிசெய், அரசே இலங்கை அரசியல் யாப்பிலுள்ள மனித உரிமையை மீறி செயற்படாதே, மக்களுடைய அடிப்படை உரிமைகளை பாதுகாப்பது அரசுடைய கடமையாகும், பயங்கரவாத எதிர்ப்பு சட்ட முன்மொழிவை மீளப்பெறு உட்பட பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சிவில் சமூக அமைப்புகள், மகளிர் அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் எனப் பல்வேறு தரப்பினரும் ஆதரவு வழங்கியிருந்தனர்.

இதன்போது, கிழக்கு மாகாண சிவில் சமூகத்தின் பிரகடனம் ஒன்றும் வாசிக்கப்பட்டு அவை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் அரசியல் கட்சி பிரதிநிதிகளுக்கும் வழங்கிவைக்கப்பட்டன.

---

# ????????? ????????? ????? ?????????? ???????? ???.??.





இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கட்சியின் பொதுச்சபை உறுப்பினர்களின் அதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவரைத் தேர்வு செய்யும் பொதுச்சபைக் கூட்டம்

இன்று(21.01.2024) தமிழர் தலைநகர் திருகோணமலையில் இடம்பெற்றது.

இந்நிலையில், 184 வாக்குகளைப் பெற்று சிறீதரன் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், எதிர்த்துப் போட்டியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் 137 வாக்குகளைப் பெற்றுக் கொண்டார்.

கட்சியின் தலைவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராஜா தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் சிரேஸ்ட தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழரசுக் கட்சி வரலாற்றில் முதற்தடவையாக தலைவர் தேர்வு மூவருக்கிடையிலான போட்டியாக அமைவதால் இன்றைய கூட்டம் முக்கியம் வாய்ந்ததாக தமிழ் அரசியற் தரப்பில் அனைவர் மத்தியிலும் பார்க்கப்பட்டது.

அந்த அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் ஆகியோர் கட்சியின் தலைவர் பதவிக்காக போட்டியிட்டனர்.

இதில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் சக போட்டியாளரான நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனுக்கு தனது ஆதரவை வழங்கினார். இதனைத் தொடர்ந்து தலைவர் தெரிவிற்கான வாக்களிப்பினை நடத்துவதற்கு பதில் செயலாளர் பா.சத்தியலிங்கத்தினால தெரிவிக்கப்பட்டதையடுத்து, இரகசிய வாக்களிப்பு இடம்பெற்றது.

தமிழரசுக் கட்சி வரலாற்றில் தலைவர் ஒருவர் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றமை இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

---

# [illegible]






தமிழர்களின் தைத்திருநாளாகிய பொங்கல் விழா பிரித்தானிய பிரதமரின் அதிகாரபூர்வ இல்லமான இலக்கம் 10 டவுனிங் வீதியில் நேற்று (18) கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

அதிகாரபூர்வ நுழைவாயிலில் கண்கவர் கோலமிட்டு தமிழீழத்தின் தேசிய மலரான கார்த்திகை பூ அலங்கரிக்கப்பட்ட பொங்கல் பானை மற்றும் கரும்பு என்பவற்றுடன் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

சுகாதாரம் மற்றும் சமூக பராமரிப்புக்கான அமைச்சர் விக்டோரியா அட்கின்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்வியாளர்கள், சட்டவாளர்கள், தொழில்முனைவோர் மற்றும் மருத்துவ வல்லுநர்கள் உட்பட பிரித்தானிய தமிழ் சமூகத்தின் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உயர் ஸ்தானிகர்கள், குறிப்பாக இங்கிலாந்துக்கான இந்திய உயர் ஸ்தானிகர் விக்ரம் துரைசுவாமி என பலர் கலந்து கொண்டனர்.

இதில் தமிழ் சமூகத்தை வரவேற்று உரையாற்றிய அமைச்சர் அட்கின்ஸ்,

உலகப் போரின் முன்னோடி விமானிகள் முதல் கோவிட் தடுப்பூசி கண்டுபிடிப்பில் ஈடுபட்ட விஞ்ஞானிகள் வரை ஐக்கிய இராச்சியத்திற்கு தமிழர்களின் நீண்டகால பங்களிப்புகளை பாராட்டினார். மேலும் தேசிய சுகாதார சேவையில் பணியாற்றும் தமிழர்களுக்கும், ஆசிரியர்கள் உட்பட தமிழ் கல்வியாளர்களுக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

அதேவேளை இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் நீதிக்கான இங்கிலாந்தின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினார். இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு தமது ஆதரவை வலியுறுத்துவதாகவும் இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தை ஆதரிக்கும் ஒரு திட்டத்திற்காக 11 மில்லியன் பவுண்டுகள் ஒதுக்கப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார். இது நீதிக்கான ஐக்கிய இராச்சியத்தின் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும் எனவும் குறிப்பிட்டார்.

அமைச்சரது உரையை தொடர்ந்து திருமதி உஷா ராகவனின் மாணவிகளின் பாரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றதுடன் பொங்கல், தோசை, இட்லி, வடை உள்ளிட்ட பாரம்பரிய தமிழ் உணவுப் பண்டங்களும் பரிமாறப்பட்டன.




10